

பன்னோக்குப் பார்வையில்

# தமிழ்மொழியும் இலக்கியமும்

தொகுதி – II


பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்

முனைவர் மா. சிதம்பரம்

முனைவர் சு. குமரன்

முனைவர் கிருஷ்ணன் மணியம்

முனைவர் சு. இராமலிங்கம்

முனைவர் த. பிரியா

II

# பன்னோக்குப் பார்வையில் தமிழ்மொழியும் இலக்கியமும்

(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)

பதிப்பாசிரியர்கள் : **முனைவர் க. முருகேசன்**
**முனைவர் மா. சிதம்பரம்**
**முனைவர் சு. குமரன்**
**முனைவர் கிருஷ்ணன் மணியம்**
**முனைவர் சு. இராமலிங்கம்**
**முனைவர் த. பிரியா**

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்கள்
முதற்பதிப்பு : ஏப்ரல், 2019
வெளியீடு : **தமிழ்த்துறை**
**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**
**கோயம்புத்தூர் – 641 029.**
கணினி : பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் – 29.
அச்சாக்கம் : பிரடாக் பிரிண்ட்
476, பூமாதேவி கோவில் அருகில்
கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)
கோயம்புத்தூர் – 29.
அலைபேசி : 9843273994,7092092066
பக்கங்கள் : XXII + 488 = 510
விலை : உரூ. 400/-

**ISBN : 978 - 93 - 80800 - 56 - 1**

## International Conference on Heterogeneous Perspectives in Tamil Language and Literature

Editor's : **Dr. K. Murugesan. Dr. M. Chidambaram**
**Dr. S. Kumaran. Dr. Krishnan Maniyan.**
**Dr. S. Ramalingam. Dr. D. Priya**
Copyright's : Editors
First Edition : April, 2019
Published : **Department of Tamil**
**Kongunadu Arts and Science College**
**Coimbatore - 641 029.**
Computer : **Prdag Print**, Coimbatore - 29.
Printing at : **Prdag Print**
476, Near Boomadevi Kovil
G.N. Mills (Po), Coimbatore - 29.
Cell : 9843273994, 7092092066
Pages : XXII + 488 = 510
Prize : **Rs. 400/-**

129. பேரா.வை. குணசேகரன் மற்றும் முனைவர் பொ. வெங்கடேசன் 698
புதுக்கோட்டை மாவட்ட மீனவர்களின் தொழிற்பாடல்

130. முனைவர் வெ. திருவேணி 702
தமிழ் இலக்கியங்களில் மன்னனும் மக்களும்

131. முனைவர் ஆ. சரவணன் 707
நீலகிரியின் பூர்வக்குடிகள் படகர்

132. மகேஸ்வரி தேவராஜு 711
நாயன்மார்களின் ஆலயத் திருப்பணிகள்

133. ந. நதியா 715
கார்நாற்பது கூறும் முல்லைநில வருணனை

134. முனைவர் து. சேகர் 720
ஒப்பீட்டு நோக்கில் கல்வியியல் சிந்தனைகள்
(நன்னூலார் - தற்காலக் கல்வியியலார்)

135. முனைவர் இரா. மாலதி 726
தமிழில் உயிர் அறிவியல் சிந்தனைகள்

136. முனைவர் பா. காசிவைரவன் மற்றும் முனைவர் போ. மாரிச்சாமி 731
தமிழ் இலக்கியங்களில் வணிகர்களின் பண்பாடு

137. முனைவர் மா. முத்துராமன் 735
திராவிடநாடு இதழில் சிறுகதைகள்

138. முனைவர் சொ.மெ. அழகப்பன் மற்றும் முனைவர் இராம. சந்திரசூடன் 741
தமிழ் இலக்கியங்களில் சித்தமருத்துவம்

139. சு. மகாலட்சுமி 747
சுப்ரபாரதிமணியனின் ரேகை புதினத்தில் வாழ்வியல் கூறுகள்

140. முனைவர் இரா. ஜெகதீசன் 752
தொல்காப்பியம் : அன்றும் இன்றும்

141. முனைவர் வெ. சத்யநாராயணன் 759
விருந்தோம்பி வேள்வி தலைப்படாதார்

142. முனைவர் ஜெ. பிருந்தா ஸ்ரீ 764
வீரம் நிறை காவற்பெண்டு

143. முனைவர் மகா. சுந்தர் 769
வள்ளுவத்தில் தாய்மை

# 136. தமிழ் இலக்கியங்களில் வணிகர்களின் பண்பாடு

**முனைவர் பா. காசிவைரவன்**
உதவிப்பேராசிரியர்
வணிகவியல் துறை
ஆறுமுகம் பிள்ளை சீதை
அம்மாள் கல்லூரி
திருப்பத்தூர் - 211

**முனைவர் போ. மாரிச்சாமி**
உதவிப்பேராசிரியர்
வணிகவியல் துறை
ஆறுமுகம் பிள்ளை சீதை
அம்மாள் கல்லூரி
திருப்பத்தூர் - 211.

## அறிமுகம்

தமிழ் இலக்கியத்தில் வணிகமும் பண்பாடும் பண்டைக்காலம் தொட்டு வழக்கில் உள்ளது என்பதை சங்க இலக்கியங்கள் மூலம் நாம் அறியமுடிகிறது. ஆகவேதான் நம் முனோர்கள் சேர்த்து வைத்திருந்தத செல்வத்தை அழித்து உண்டு சோம்பி இருக்காமல், சொத்தக் காலில் நின்று உழைத்து உயர்வடைய எண்ணினர்.

*'பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்யும்*
*பொருளல்ல தில்லை பொருள்' (குறள்: 751)*

என்ற குறளின் வள்ளுவர் விளக்கியுள்ளார். பண்டைத் தமிழர் வணிகத்தை உள்நாட்டு வணிகம், வெளிநாட்டு வணிகம் என வகுத்துப் பொருள் ஈட்டினர். உள்நாட்டு வணிகம் நிலம் சார்ந்ததாக அமைந்தது. அயல்நாட்டு வணிகம் கடல் சார்ந்து இருந்தது. தம் நாட்டிற்கும் பிற நாட்டிற்கும் ஒரு வலுவான தொடர்பை ஏற்படுத்துவது வாணிகம். வணிகத்தின் செயல்பாடு நாட்டின் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாய் சங்ககாலம் முதலே இருந்ததையும் வணிகர்களின் வணிக பண்பாடு பற்றியும் அறியலாம்.

## வணிக நிர்வாகம்

*'தேன் நெய்யோடு கிழங்கு மாறியோர்*
*மீன் நெய்யோடு நறவு மருகம்'*
*(பெருநராற்றுப்படை -214-154)*

ஒரு பொருளுக்கு மாறாக மற்றொரு பொருளைப் பெரும் முறையை பண்டமாற்று முறை எனப்படும். குறிஞ்சி நிலத்தில் இருக்கும் மக்கள் தங்கள் நிலத்தில் விளைந்த தேனையும் கிழங்கையும் நெய்தல் நிலத்தில் விற்று அவற்றின் விளையாக மீனைப் பெற்றனர். அன்றைய வணிக முறையில் நம்பிக்கையும் நேர்மையான செயல்பாடும் காணப்பட்டது என்பதை விளக்குகிறது. காவிரிப்பூம்பட்டினத்தில் பல நாட்டினரும் விரும்பி வந்து வணிகம் செய்தனர் இதனால் வணிக வளத்திற்கு உதவியாக விளங்கினார்கள். என்பதை,

*'புலம்பெயர் மக்கள் கலந்துஇனிது உறையும்*
*முட்டாச் சிறப்பின் பட்டினம் (பட்டின:216 218)*

என்ற வரிகள் மூலம் நாம் அறியலாம்.

## வணிகர்களின் பண்புகள்

வணிகர்கள் நேர்மையும் ஒழுக்கமும் உடையவர்களாக விளங்கினர். பண்டைத்தமிழ் வணிகர்கள் இலாபத்தை வெளிப்படையாகச் சொல்லி விற்பனைகளில் ஈடுபட்டனர். மேலும் தரமான பொருட்களை மட்டும் மக்களிடம் கொண்டு சேர்த்ததோடு நடுநிலை தவறாமல் நேர்மையுடனும் செய்லாற்றினர் என்பதை,

*'கொடுமேழி நசைஉழவர்*
*நெடுநுகத்துப் பகல்போல*
*நடுநின்ற நல்நெஞ்சினோர் (பாட்டின :2வீ5 2வீ7)*

என்று வணிகர்களின் மென்மையைப் பட்டினப்பாலை உணர்த்துகிறது.

## வணிக வகைகள்

வணிகத்தை உள்நாட்டு வணிகம், அயல்நாட்டு வணிகம் என இரண்டாக வகைப்படுத்தலாம். வணிகம் தொடக்கத்தில் பண்டமாற்று முறையில் நடைபெற்றது. பின் நாணயங்கள் அறிமுகத்திற்கு பின் பன்னாட்டு வணிகமும் நடைபெற்றதை சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

## உள்நாட்டு வணிகம் அல்லது நிலம் சார்ந்த வணிகம்

வணிகர்கள் பலர் ஒன்று சேர்ந்தது பொருள்களைக் கூட்டாக சென்று வணிகம் செய்துள்ளனர். இவ்வாறு நிலம் வழி வணிகம் செய்பவர்களை சாத்துக்கள் என்பார்கள். சாத்துக்களின் தலைவன் மாசாத்துவான் என்று அழைக்கப்படுவார். வடமலையில் மணியும், பொன்னும், குடமலையில் ஆரமும் அகிலும் தென்கடல் முத்து குணகடல் துகிர் கங்கை ஆகிய இடங்களிலிருந்து வந்த பொருட்களை இறக்குமதி செய்தன என்பதை,

*'காலின் வந்த கருங்கறிமூடையும்*
*வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்*
*குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்*
*தென்கடல் முத்தும் குணகடற் துகிரும்*
*கங்கை வாரியும் காவிரி பயனும்' (பட்டி. 186 19வீ)*

என்னும் அடிகள் எடுத்துரைக்கின்றது. அங்காடி அமைத்து மற்றும் பொருட்களைவிற்றல் என்பது நிலம் வழி வணிகம் என்பதை பட்டினப்பாலையானது புகார் நகரத்தில் காணலாகும் அங்காடித் தெருக்களை விவரித்துள்ளது. இதனை,

***பணிலம் கலி அவிந்து அடங்க காழ்ச சாய்ந்து***
***நொடை நடுவில் நெடுங்கடை அடைத்து மடமதர்***
***ஒள்இழை மளிர் பள்ளி அயர (மதுரை 621 623)***

என்ற பாடலடிகள் வழி உணர முடிகிறது.

## நீர் வழி வணிகம்

உள்நாட்டு வணிகம் தரைவழி மட்டும் இன்றி நீர் வழியாகவும் நிகழ்ந்துள்ளது. உப்பை விற்று அதற்குப் பதிலாக நெல்லை ஏற்றி வந்த படகுகள் சோழநாட்டின் புகார் நகரின் கடற்கரையில் கட்டப்பட்டிருந்தது குதிரைகளை வரிசையாகக் கட்டி வைப்பது போல காட்சியளிப்பதை,

***வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி***
***நெல்லொடு வந்த வல் வாய்ப் பற்றி***
***பனை நிலை புரவியின் அணைமுதல் பிணிக்கும்***
***கழி சூழ் படப்பை கலி யாணர்ப்***
***பொழில் புரவின் பூந் தண்டலை (பட்டி. 29-33)***

என்ற பாடலின் வழி உணரமுடிகிறது.

## அயல்நாட்டு வணிகம் கடல் சார்ந்த வணிகம்

பண்டைய தமிழர்கள் கடல் மார்க்கமாக ஏற்றுமதி இறக்குமதி வணிகத்தில் ஈடுபட்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியுள்ளன்ர் என்பதற்கு சான்றுகள் ஏராளமாக இலக்கியங்களில் உள்ளன. தொண்டி காவிரிப்பூம்பட்டினம் முசிறி கொற்கை ஆகிய துறைமுகங்களாச் செயல்பட்டன. மேலும் ஈழம், காழகம், சீனம், யவனம் போன்ற நாடுகளுடன் வணிகம் செய்து நல்லுறவு கொண்டு வாழ்ந்தனர்.

***வங்கம் போகும் வணிகர் தம்முடன்***
***தங்கா வேட்கையின் தானும் செல்வழி***
***நளியிரு முந்நீர் வளிகலன் வெளவ்***
***(ஆதிரை பிச்சையிட்ட காதை)***

என்னும் வரிகளால் மணிமேகலை உணர்த்துகின்றது. 'திரை கடலோடியும் திரவியம் தேடு' என்கிற மொழிக்கேற்ப நமது முன்னோர்கள் கடல் கடந்து வணிகம் செய்த செய்திகள் பண்டைய இலக்கியங்களில் நிறையவே காணக் கிடைக்கின்றன

***வடவர்தந்த வான்கேழ் வட்டம்***
***தென்புல மருங்கில் சாந்தொடு துறப்ப***
***(நெடுநல்வாடை, 51-52)***

எனும் வரிகள் மூலம் சந்தனம் அரைக்க பயன்படும் வெள்ளைநிற வட்ட வடிவ கற்களை கிரேக்கர்கள் அரண்மனைகளுக்கு வழங்கியுள்ளனர் என்பது தெரியவருகிறது.

அயல்நாட்டு வாணிகம் பெரும்பாலும் கடல் சார்ந்ததாகவே இருந்தது. கடலுக்கும் சங்ககாலத் தமிழருக்குமான உறவு நெருக்கமானது. சங்க இலக்கியங்களில் கடல் குறித்தும் மரக்கலம் குறித்தும் பல சொற்கள் வழங்கி வந்திருக்கின்றன. கடல் போக்குவரத்திற்காக ஓடம், பரிசல், புனை, தோணி, அம்பி, திமில், படகு, கப்பல், நாவாய் முதலிய கலங்கள் பயன்படுத்தப்பட்டதற்கு சான்றுகள் உள்ளன. கடல் வாணிகத்தை ஊக்குவித்த கரிகாற்சோழனைப் புறநானூறு பாடுகின்றது.

*'நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி*
*வளிதொழில் ஆண்ட வரவோன் மருக' (புற:66)*

துறைமுகங்களில் பல்வேறு நாட்டுக் கப்பல்கள் இளைப்பாறுகின்ற செய்தியை நற்றிணை அறிவிக்கின்றது.

## அறநெறி மாறா பண்பு

வணிகர்கள் பிறர் பொருளைத் தம் பொருளாகப் பார்க்கும் தன்மை மற்றும் தாம் கொள்ளும் பொருட்களுக்குக் கொடுக்கும் பொருளுக்கு மிகுதியாகக் கொடுக்கும் மனப்பான்மையில் சிறந்த வணிகர்களாகவும் மேலும் கொலை களவு போன்ற தொழில்களை நீக்கியும் அறநெறி மாறா பண்பு உடையவர்களாக் வணிகர்கள் திகழ்ந்தனர் என்பதை,

*கொலை கடிந்தும் களவு நீக்கியும்*
*..............................*
*கொள்வதூஉம்மிகைகொள்ளாது*
*கொடுப்பதூஉம் குறை கொடாது (பட்டி. 196 - 21)*

என்ற பட்டினப்பாலை அடிகள் வழிஅறியமுடிகிறது.

## முடிவுரை

பண்பாடு என்பது சமுதாயத்தில் ஓர் உறுப்பினர் என்றும். கலை அறிவியல் மற்றும் வணிகம் என அனைத்திலும் மனித பிறப்பு முதல் இறப்பு வரை வாழ்வியல் வழிமுறைகளை ஒரு தலைமுறையில் இருந்து அடுத்த தலைமுறை அறியும்படி வாழ்வியல் நெறிமுறைகளை கொண்டு வாழ்ந்த தமிழர்களே இவ் உலகிற்கு முதன்மையானவர்கள் என்றால் அது மிகையாகாது.

# பன்னோக்குப் பார்வையில்
# தமிழ்மொழியும் இலக்கியமும்

தொகுதி – II






**பிரடாக் பிரிண்ட்**

476/1 பூமாதேவி கோவில் அருகில்
கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)
கோயம்புத்தூர் - 29.
அலைபேசி : 98432 73994, 73588 63327

9 789380 800561